புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
ज्ञान - विज्ञानं विमुक्तये
UGC Approved Journals
ISSN: 2456-821X
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
Vol:07, Issue: 02 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது மே 2023 – வெளியிடப்பட்டது ஜுன் 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS
June-2023

======================================================================

# பெரும்பாணன் பயணமும் திணைசார் இனக்குழு சமுதாயமும்

*வெ. மாரிச்செல்வி,*
*முழு நேர முனைவர் பட்ட ஆய்வாளர், பதிவு எண்: 22212014022007*
*முதுகலை மற்றும் தமிழாய்வு மையம்*
*ஏ.பி.சி,மகாலட்சுமி மகளிர் கல்லூரி,தூத்துக்குடி-2.*
*மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், அங்கீகாரம் பெற்றது, அபிஷேகப்பட்டி,*
*திருநெல்வேலி, -12, தமிழ்நாடு, இந்தியா.*

*முனைவர். அ. விஜயலட்சுமி,*
*நெறியாளர், உதவிப் பேராசிரியர், முதுகலை மற்றும் தமிழாய்வு மையம்*
*ஏ.பி. சி,மகாலட்சுமி மகளிர் கல்லூரி,தூத்துக்குடி-2.*

======================================================================

*ஆய்வுச் சுருக்கம்*

*சங்க இலக்கியங்கள் சமூக அமைப்பைத் தெளிவாக வரையறுத்துக் காட்டுகின்றன. பாடல்களில் பதிவாகியுள்ள செய்திகளைக் கொண்டு காலத் தொடர்ச்சி மற்றும் படிமுறை வளர்ச்சியினை அறிய முடிகிறது. இனக்குழு அமைப்பிலிருந்து நிலவுடைமை முறைக்குக் கடந்து செல்லும் நிலையினைக் காண முடிகிறது. இதனை பெரும்பாணனின் பயண வழியின் வழி அறியலாம். குறிஞ்சி நில உணவு முறையானது மருதத்தில் நிலம் சார்ந்து நிலவுடைமை உழவர்களைக் காட்டுகிறது. உணவு முறைகளும் அதன் முதன்மையான உற்பத்தியினை சார்ந்து அமைகிறது. இவ்வகையில் பெரும்பாணன் கடந்து சென்ற திணைக்குடிகளின் வாழ்வியலில் உணவின் பங்கினைக் கொண்டு உணவுசார் பண்பாட்டு படிமலர்ச்சி அறியப்படுகிறது.குறிஞ்சி நிலத்தின் உற்பத்திமுறை இயற்கை சார்ந்ததாகவே காணப்படுகின்றது. தேன் சேகரிப்பு. கிழங்கு அகழ்தல், தினை, மலை நெல் பயிரிடல் போன்ற எளிய விவசாய முறை மூலம் தங்களது உணவுத் தேவையை நிறைவு செய்தனர். முல்லை நிலத்து மக்களின் உணவு முறை மற்றும் உற்பத்தி கால்நடை சார்ந்ததாக இருந்தது. மருதநிலம் வேளாண்மையில் மேன்மையும் வளர்ச்சியும் பெற்றிருந்தது. நீரினை சேர்த்து அதன்வழி செய்யும் உணவு உற்பத்தி முறையினையும் உழவர், களைஞர் என்ற நிலம் சார்ந்த பிரிவினரையும் அறிய முடிகிறது. களைஞர் என்ற சொல் சொந்த நிலம் இல்லாத விவசாயக் கூலிகளை களை எடுப்பவர் என்னும் பொருளில் குறிப்பிடுகிறது. நெய்தல் நிலம் மீன், கருவாடு, இறைச்சியை முக்கிய உற்பத்தியாகக் கொண்டிருந்தது. உப்பினை விற்பதற்கான உமணர் என்ற தனித்த பிரிவினை அறிய முடிகிறது. பாலை நிலம் உணவு உற்பத்தியில் பெரிதாக இடம்பெறவில்லை. வேடர் குடும்பம் எயினர் குடும்பம் என்று சுட்டப்பெறுகிறது. திணைகளுக்கிடையேயான பரிமாற்ற உறவுகளும், பண்டமாற்றும் உணவு வேறுபாடும் அறியப்படுகின்றன. இதன் மூலம் தமிழகப் பண்பாட்டு நிலைக்களங்களை அடையாளம் காண முடிகிறது.*

*முன்னுரை:*

*சங்க இலக்கியங்கள் பண்டைத் தமிழ் மக்கள் வாழ்வியலைப் பறைசாற்றுகின்றன. இவை பழந்தமிழ், மக்களின் உணவியல் சார்ந்த மானிடவியலை திணை அமைப்பின் வழி வெளிப்படுத்துகின்றன. அம்மக்களின் வாழ்க்கை நிலைகளை காலம், இடம், பொருள் ஆகிய இயற்கை சார்புடன் காட்டுகின்றன.பத்துப்பாட்டுகளுள் 4-வது பாட்டு பெரும்பாணாற்றுப்படை. 500 அடிகளைக் கொண்டது. ஆசிரியப்பாவால் ஆனது. பெரிய யாழை மீட்டும் பெரும்பாணரை தொண்டைமான் இளந்திரையனிடம் ஆற்றுப்படுத்துவதாக கடியலூர் உருத்திரங் கண்ணனாரால்*

பாடப்பெற்றது. இதில் பெரும்பாணன் தனது பயண வழியில் கடந்து சென்ற திணைசார் இனக்குழு மக்களின் உணவியல் சார்ந்த மானிடவியல் கூறுகளை ஆய்வதாக இவ்வாய்வு அமைகிறது.

பெரும்பாணாற்றுப்படை காட்டும் பாணர்:

தமிழகத்தில் வாழ்ந்த பண்டைக்குடிகளுள் பாண்குடியும் ஒன்றாகும். பண் வாசிக்கும் இயல்புடையவர். ஆதலால் பாணர் எனப்பட்டனர். இவர்கள் இசைப்பாணர் (பாடுவோர்) யாழ்ப்பாணர் (யாழ் இசைப்போர்), மண்டைப் பாணர் ( இரவல் பெறுவோர்) என்று மூவகையில் அமைந்துள்ளனர். பாணர்கள் கூட்டம் கூட்டமாக ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு புரவலரைத் தேடிக் கொடை வேண்டி அலைந்து திரிவதை பழுமரம் தேடி அலையும் பறவைகளோடு ஒப்பிட்டு பெரும்பாணாற்றுப்படை காட்டுகிறது.

"பழுமரம் தேரும் பறவை போல
கல்லென் சுற்றமொடு கால்கிளர்ந்து திரிதரும்"

- (பெ.20-21).

பாணர்கள் பாடுவதற்காகப் பயணம் செய்தார்கள். எப்போதும் குழுவாகச் சென்றார்கள் . இவர்களின் ஆடலும் பாடலும் கூட்டு அனுபவம் சார்ந்து அமைகிறது. இதனை,"இனக்குழு சமூக வடிவத்தின் பிரதிபலிப்பு" என்றும் "சமூகப் பொதுவுடமை இதில் காணப்படும் முதன்மைப் பண்பாகும்" [1] என்றும் பக்தவச்சலபாரதி கூறுகிறார் . சங்ககாலப் பாண்குடிச் சமூகத்தினர் சீறூர்த் தலைவர்களையும், திணைக்குடிச் சமுதாய மக்களையும் தேடி சென்று உணவு பெற்றனர் என்பதை அவர்களது பயணங்கள் புலப்படுத்துகிறது.

திணை சார் இனக்குழுச் சமூகம்:

ஐந்திணைகள் நிலத்தின் அடிப்படையில் மட்டும் வேறுபடவில்லை. மக்கள், உணவு, உற்பத்தி முறை ஆகியவற்றிலும் வேறுபட்டவை. ஒவ்வொரு திணையிலும் வெவ்வேறு தொழில் செய்யும் குழுக்கள் காணப்பட்டன.

"நடத்தை முறைகளோடு தொடர்புடைய திணைக் கருத்துக்கள், சூட்சுமமான சிந்தனைகளின் விளைவாகத் தோன்றியவையாகக் காணப்படுகின்றன. "திணை" என்ற சொல்லின் மூலப்பொருளான குடும்பம், குடியிருப்பு ஆகியவை முக்கியத்துவம் பெறுகின்றன. பல நிலப்பகுதிகளில் நடத்தை முறைகளை விளக்கும் சொற்களாக அவை பரிணமித்த வரலாற்றை குறிப்பிடுகின்றன." [2] என்று திணையின் அமைப்பினை சிவத்தம்பி கூறுகிறார் .

சமூக அமைப்பானது அதன் உற்பத்தி முறையைக் கொண்டே தீர்மானிக்கப்படுகிறது.பெரும்பாணாற்றுப்படை எயினர், கானவர், குறவர், கோவலர், களைஞர், உழவர், வலைஞர், அந்தணர் போன்றோரின் வாழ்வியல் நிலைக் களங்களையும் பாணர்களுக்கு கொடையாக உணவளிக்கும் பாங்கினையும் காட்டுகிறது.

இனக்குழு மக்களின் கொடைப் பாங்கு :

தம்மை நாடி வரும் இரவலர்க்கு இல்லை என்று கூறாது உணவளிக்கும் தன்மையினை சங்க இலக்கியம் காட்டுகிறது. "பாண் சமூகத்தினர் பேரரசர்களைக் காட்டிலும் குறுநில மன்னர்களையும் சீறூர்த் தலைவர்களையும், ஊர்க் கிழார்களையும் மிகுதியாக நாடியுள்ளனர்" [3] என்று பக்தவச்சல பாரதி தமது ஆய்வில் கூறுகிறார்.

பெரும்பாணன் இளந்திரையனைக் காணச் செல்லும் வழி நெடுகிலும் உள்ள திணைசார் குடிகள் தாங்கள் உண்ணும் உணவினை வரையாது தருவர் என்பதை,

"காட்டு மாவும், உறுகண் செய்யா, வேட்டு, ஆங்கு
அசைவுழி அசைஇ, நசைவுழித் தங்கி.
சென்மோ, இரவல! சிறக்க நின் உள்ளம்"

-பெ (43-45) என்ற வரிகளின் வழி அறிய முடிகிறது.

இனக்குழு சமுதாய பொருளாதார வலிமை, வீரர்களுக்கு உணவளித்தல் மற்றும் பாணர் மற்றும் இரவலர்களுக்கு விருந்து படைத்துப் பரிசளித்தல் ஆகியவற்றின் மூலம்

மதிப்பிடப்படுகிறது. "கொடை என்பது மறுபங்கீட்டின் வடிவமாக அமைந்தது" [4] என்று ராஜன் கூறுகிறார்.

உணவு சார்ந்த இனக்குழு அமைப்பு:

மனித இனப் படிமலர்ச்சியின் ஊடாக உணவும் பல்வேறு நிலைகளைக் கடந்து வளர்ச்சி அடைந்து வந்துள்ளது. உணவு சார்ந்த மரபுகளை அறிந்து கொள்வதன் வாயிலாக மாறுபட்ட திணைகளின் பண்பாட்டை அறிந்து கொள்ள முடியும்.

"சங்க காலத் தமிழ்ச் சமுதாயம் உணவு,உடை, உறைவிடம் போன்றவற்றை நிறைவேற்றுவதில் சமச்சீரான நிலைமையில் காணப்படாமல் சில படிநிலைகளில் ஏறுவரிசையிலான கிரமத்தில் இருந்தது. வேட்டைச் சமூகம் முதல் வேந்தர் ஆட்சிச் சமூகம் வரை ஏறுவரிசையில் அமைந்த சங்ககாலத் தமிழ்ச் சமூகத்தில் இப் படிநிலைகளுக்கு ஒத்தவாறு உணவு, உடை, உறைவிடம் ஆகிய தேவைகள் நிறைவேற்றப்பட்டன" [5] என்று ராஜ்கௌதமன் கூறுகிறார்.

எயினர் இனமக்கள் :

பாலை நிலத்தில் உணவு வகைகள் குறைந்து காணப்படுகின்றன. நெல்,புல்லரிசி, ஆமை இறைச்சி, உடும்பு ஆகியவை இன்றியமையாத உணவாக அமைகின்றன. பெரும்பாணாற்றுப்படையில் பாலை நிலப் பெண்கள் புல்லரிசியை சேகரித்த முறையினை,

"இரும்பு தலையாத்த திருந்துகணை விழுக்கோல்
உளிவாய்ச் சுரையின் மிளிற மிண்டி
இருநிலக் கரம்பைப் படுநீராடி
நுண்பு லடக்கிய வெண்பல் எயிற்றியர்"

-பெ.(89-94)

என்ற பெரும்பாணாற்றுப்படை வரிகள் காட்டுகிறது.பாலை நிலத்துக்குரியவர்கள் எயினர், வேட்டுவர், மறவர், ஆறலைக் கள்வர் என குறிக்கப்படுகின்றனர். இச்சமூக அமைப்பில் எளிய வேளாண்முறை, வேட்டை ஆகிய இருவகையான உற்பத்தி முறைகள் உள்ளன. வரகு, சிறுதினை உற்பத்தி சிறியளவில் செய்யப்பட்டதை அறிய முடிகிறது. உடும்பு, முயல், காட்டுப்பன்றி வேட்டையாடப்பட்டன. மேட்டு நிலத்தில் ஈந்தின் கொட்டை போன்ற அரிசி விளைவிக்கப்பட்ட செய்தியினை,

"கொடுவில் எயினக் குறும்பில். சேப்பின்
களர் வளர் ஈத்தின் காய்கண்டன்ன".

- (பெ. 135-136) என்ற வரிகளில் அறிய முடிகிறது.

குறிஞ்சி நில மக்களின் வாழ்க்கை:

குறிஞ்சி நிலத்தின் உற்பத்தி முறையானது இயற்கை சார்ந்ததாக காணப்படுகின்றது. இவர்களது உணவாகத் தேன்,கிழங்கு வகைகள் இறைச்சி ஆகியவை குறிப்பிடப்படுகின்றன.

"இல்அடு கள்இன் தோப்பி பருகி
மல்லல் மன்றத்து மதவிடை கெண்டி"

-பெ (143-144)

என்னும் வரிகள் அரிசிக்கள் மற்றும் ஆட்டுக்கிடாய் இறைச்சியை உண்டதை கூறுகிறது.அரிசிக்கள் என்பது அரிசியை பதப்படுத்தி அதன்மூலம் உருவாக்கப்படுகின்ற பானம் ஆகும்.

. "வேட்டையாடுதல், உணவு சேகரித்தல், எளிய வேளாண்மை ஆகிய மூன்று வகையான உற்பத்தி முறைகள் குறிஞ்சி நிலம் சார்ந்தவையாக அமைகின்றன" [6] என்று ஞா.ஸ்டீபன் கூறுகிறார். உழவு செய்யாமல் பயிரிடப்படும் வேளாண்மையே குறிஞ்சிநில உணவு உற்பத்தி முறையாக இருந்தது என்பதை,

"உழவர் உழாதன நான்கு பயன் உடைத்தே
ஒன்றே,சிறியிலை வெதிரின் நெல்விளை யும்மே "

-புறம். 109.3

*என்ற வரி குறிப்படுகிறது.பாரியின் குறிஞ்சி நிலத்தை குறிப்படும் போது அங்கு உழுது விளைவிக்க வேண்டிய தேவை இல்லாத மூங்கில் அரிசி விளையும் என்று கபிலர் கூறுகிறார். இதன் வழி குறிஞ்சி நில வேளாண் முறையின் எளிமையினை அறிய முடிகிறது.*

*கோவலர் குடியிருப்பு :*

*முல்லை நிலமக்கள் கால்நடை வளர்ப்பு மற்றும் எளிய விவசாயம் செய்வதன் மூலம் தங்களது உணவுத் தேவைகளை நிறைவு செய்தனர். இவர்கள் வரகு, துவரை போன்ற உணவுகளை பால், தயிர், நெய் போன்றவற்றுடன் உண்டனர். இதனை,*

*"குறுந்தாள் வரகின் குறள் அவிழ்ச் சொன்றி*
*புகர் இணர் வேங்கை வீ கண்டன்ன*
*அவரைவான் புழுக்கு அட்டி, பயில்வுற்று*
*இன்சுவை மூரல் பெறுகுவிர்"*

*-பெ (193-196)*

*என்று பெரும்பாணாற்றுப்படை கூறுகிறது.*
*இடையர்கள் வரகு பயிரிட்ட செய்தியை,*

*"எருது கால் உறா அது, இளைஞர் கொன்ற*
*சில்விளை வரகின் புல்லென் குப்பை"*

*-புறம். 327(1-2)*

*என்ற வரிகளில் அறிய முடிகிறது.*

*மருதநில உழவர்:*

*மருத நிலத்தில் அமைந்துள்ள வீடுளின் புறத்தே நெற்கூடுகள் இருந்துள்ளன. இதனை,*

*"ஏணி எய்தா நீள்நெடு மார்பின்*
*முகடுதுமித்து அடுக்கிய பழம்பல் உணவின்*
*குமரி மூத்தகூடு ஓங்கு நல்இல்"*

*-பெ. (245-247)*

*என்று பெரும்பாணாற்றுப்படை கூறுகிறது.*

*"மருதநில வேளாண்மையின் தொடக்ககாலம் என்பது குறிஞ்சி, முல்லை நிலங்களில் அமைந்தது போன்ற இனக்குழு உற்பத்தி முறையாகவே அமைந்திருக்க வேண்டும்"* [7] *என்று ஸ்டீபன் கூறுகிறார்.*

*கரும்பு ஆலைகளில் கருப்பஞ்சாறு எடுக்கப்பட்ட செய்தியும் கூறப்பட்டுள்ளது நெல், கரும்பு ஆகிய பயிர்கள் உணவு உற்பத்தியின் மையமாக அடையாளம் காணப்பட்டன. இவ்விரு பயிர்களுக்கும் நீர்வளம் இன்றியமையாதது. மருத நிலத்தில் உணவு என்பதன் பொருளானது,*

*"உணவு எனப்படுவது நிலத்தொடு நீரே"*

*-புறம்.18 (21-22) என பொருள் கொள்ளப்படுகிறது.*

*மருதம் தன் தேவையை விட அதிகளவில் உணவு உற்பத்தி செய்தது. மருத நிலத்தில் உழவர்கள் வளமுடையவர்களாக இருந்தனர். உணவளித்தல் என்பது மருதநிலத்தின் இனக்குழு சமூக அமைப்பின் பண்பைக் காட்டும் தொடக்க காலம் எனலாம். மருத நில உணவுகள் உணவுப் பழக்க வழக்கத்தில் ஏற்பட்ட பெருமாற்றங்களைக் காட்டுகின்றன. தானியங்களைப் பயிரிடும் முறையும் மருதநிலத்தில் நெறிப்படுத்தப்படுகிறது.*

*வலைஞரின் வாழ்நிலை:*

*நெய்தல் நிலத்தின் மீன் வகைகள், இறைச்சி, கள் உணவாக காணப்படுகின்றன. இறைச்சிக்காகக் கால்நடைகளை வளர்த்த செய்தியினை,*

*"நெல்மா வல்சி தீற்றி பல்நாள்*
*குழிநிறுத்து, ஓம்பிய குறுந்தாள் ஏற்றைக்*
*கொழு நிணத் தடியொடு கூற்றாய் பெறுகுவிர்"*

-பெ (343-345) என்ற வரிகள் புலப்படுத்துகிறது.

மீன், கருவாடு, உப்பு ஆகியவை நெய்தல் நிலத்தில் முதன்மையான உணவு உற்பத்தியாக அமைகிறது. உப்பு எல்லாத் திணைகளுக்குமான பொதுப் பண்டமாக அமைந்ததால் அதனைப் பண்டமாற்று செய்வதற்கான உமணர் என்ற தனித்த ஒரு குழு உருவானது.

உற்பத்தி முறையும் பண்டமாற்று நிலையும்:

குறிப்பிட்ட திணை மரபில் வாழும் மக்கள் அந்நிலப் பரப்பில் கிடைக்கும் உணவு வகைகளை மட்டும் உண்பதில்லை . உணவு குழுக்களிடையே பண்டமாற்று நடைபெறுகிறது. குறிஞ்சி நிலமக்கள் கிழங்கையும், தேனையும் பண்டமாற்று செய்து மீன், நெய், கள் போன்றவற்றை பெற்றுக் கொண்டனர் என்தை,

"தேன் நெய்யொடு கிழங்கு மாறியோர்
மீன் நெய்யொடு நறவு மறுகவும்
தீங்கரும் போடு அவல் வகுத்தோர்
மான் குறையொடு மது மறுகவும்".
-(பொரு 212-217)

என்று பொருநராற்றுப்படை பதிவு செய்கிறது.

குறிஞ்சி நிலப் புற பரிமாற்ற உறவில் பண்டமாற்று இருந்தமையை,

"கேளா மன்னர் கடிபுலம் புக்கு
நாள் ஆ தந்து நறவு நொடை தொலைச்சி"
-பெ .(140-141)

எனும் வரிகள் கூறுகிறது.

ஆயர்மகள் மோரினை விற்று தனக்கு வேண்டிய உணவுப் பொருளை வாங்கி வருவாள் என்ற செய்தியினை,

"அளைவிலை உணவின் கிளைஉடன் அருந்தி
நெய்விலைக் கட்டிப் பசும்பொன் கொள்ளல்"
-பெ. (163-164)

என்ற வரிகள் பதிவு செய்கிறது.

முடிவுரை :

வறுமையால் வாடிய பாணன் ஒருவன் காஞ்சிக்கு இளந்திரையனை நாடிச் செல்லும் வழியில் காணும் திணைசார் குடிகளின் சூழல் சார்ந்த உணவியல் மற்றும் இனக்குழு அமைப்பியல் கூறப்படுகிறது.உணவு வாழ்விற்கு அடிப்படையான ஒன்று. உணவு வகைகளை இனங்காணுதல், சமையல் முறை ஆகியவற்றுள்ளும் படிமலர்ச்சி உள்ளது. இதன்வழியில் ஒவ்வொரு திணையிலும் வெவ்வேறு வகையான உணவு மரபுகள் பதிவாகியுள்ளன. பண்டமாற்று முறையினை நோக்குகையில் அனைத்து இனக்குழுக்களும் உணவியலில் ஏறத்தாழ ஒன்றுபட்டிருந்தன என்பது புலனாகிறது. வேட்டை, கிழங்கு அகழ்தல் தொடங்கி மந்தை மேய்த்தல், விவசாயம், வாணிபம், வளர்ச்சி என்பது பரிணாம வளர்ச்சியாக அமைகிறது. இதனை உணவிலும் காண முடிகிறது.திணைகளுக்கிடையே நடைபெற்ற பண்டமாற்று பண்பிணையும் அறிய முடிகிறது. தற்சார்பு பொருளாதாரம் என்பதை கடந்த நிலையினையும் மறுபங்கீட்டு முறையினையும் காண முடிகிறது.

அடிக்குறிப்புகள்:

1. பக்தவச்சல பாரதி, பாணர் இன வரைவியல், ப.21,அடையாளம் பதிப்பகம்,திருச்சி,2015
2. கார்த்திக்கேசு சிவத்தம்பி, பண்டைத் தமிழ்ச் சமூகம் வரலாற்றுப் புரிதலை நோக்கி, ப.42 மக்கள் வெளியீடு -2003, சென்னை
3. பக்தவச்சல பாரதி, பாணர் இன வரைவியல், ப.30
4. ராஜன், தொல்லியல் நோக்கில் சங்ககாலம், ப.145 உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் 2010

சென்னை.
5. ராஜ் கௌதமன், பாட்டும் தொகையும் தொல்காப்பியமும் தமிழ்ச் சமூக உருவாக்கமும், ப.198, தமிழினி பதிப்பகம்,சென்னை
6. ஞா.ஸ்டீபன், இலக்கிய இன வரைவியல் ப.55
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்,சென்னை .
அக்டோபர் 2017
7. ஞா.ஸ்டீபன், இலக்கிய இன வரைவியல் ப.61
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்,சென்னை .
அக்டோபர் 2017
8. சங்க இலக்கியம் மூலமும் உரையும், தொகுதி -3, ச. வே. சுப்பிரமணியன்,
மணிவாசகர் பதிப்பகம்,சென்னை,முதற்பதிப்பு -2010.

********* ********* ********** ********* ********* ********** ********** **********